**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**நாள்** 18.09.2025

**அசல் வழக்கு எண்.212/2019**

**வா.சா.1 – ரவி, த/பெ.லோகையா நாயுடு**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நீங்கள் தாக்கல் செய்த ஆவணம் 5 ல் உள்ள பட்ட யார் பெயரில் உள்ளது என்றால் எங்கள் பெயரில் தான் உள்ளது. நாராயணசாமி நாயுடுவின் மகன் பெயர் தெரியுமா என்றால் தெரியும். சிட்டிபாபு நாயுடு ஆகும். சிட்டிபாபு என்பவர் விமலா கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு பொது அதிகார பத்திரம் கொடுத்துள்ளார் 2004 ஆகஸ்ட் 12ஆம் தேதி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் ஆவணம் நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கிட்டத்தட்ட 20 பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் 20 பேர் பதிவு செய்த பத்திரங்களை தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யவில்லையா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. வெளியில் இருந்து யாராவது தாக்கல் செய்து விட்டார்களா என்றால் நான் தான் தாக்கல் செய்தேன். ஒரு முறையான ஆவணம் இல்லையென்றால் அது பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய முடியாது சரியா என்றால் சரிதான். முறையான ஆவணம் என்பதால் தான் பதிவாளர் பதிவு செய்தார் என்றால் சரிதான். உங்கள் பெரியப்பா நாராயணசாமி அவர்களின் மூலப்பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் நாராயணசாமி மூல பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை வழக்கில் தாக்கல் செய்ததாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. பெரியப்பாவோ அல்லது அவரது வாரிசுலோ உங்களுக்கு ஏதேனும் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்களா அந்த ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்தீர்களா என்றால் உயில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நீங்கள் எந்த ஒரு உயிலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை ஆனால் நீங்கள் தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. போதிய ஆவணங்களை வேண்டிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் பொய்யாக வழக்கு

தாக்கல் செய்து நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் பெரியப்பா ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் உங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.